REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ்   ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 8உ புதன் (22—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 9உ வியாழன் (23—6—55) [இதழ் 7

குடியானவர்களை வெளியேற்றுவதைத் தடுக்க!

அவசரச் சட்டம் வருமா?

கருதப்பட்டுள்ள நிலச் சீர்திருத்தத்தை எதிர்பார்த்து, தங்களுடைய வயல்களில் உழவு செய்துவரும் குடியானவர்களை வெளியேற்ற நிலப்பிரபுக்கள் முயற்சித்து வருகின்றனர். அவ்வெளியேற்ற முயற்சியைத் தடுக்க அவசரச்சட்டமொன்றைப் பிறப்பிக்க

(4-ம் பக்கம் பார்க்க)

கோவை வசந்தா குருடானது ஏன்?

அம்மையோ க்ஷய நோய்த் தடுப்பு ஊசியோ காரணமல்ல

மூளை கொதிப்புப் பிணியே மூல காரணம்

ஆச்சாரியாரின் அரசியல் அபத்தத்திற்கு மருத்துவ நிபுணர்கள் குட்டு

"கோவை சிறுமியான வசந்தாவின் கண்கள் குருடானதற்கு, க்ஷய நோய் தடுப்பு ஊசியோ, அம்மை நோயோ காரணமல்ல; பெருவாரி நோயான மூளைக் கொதிப்புக்கு ஆளான காரணத்தினுல்தான் வசந்தாவின் கண்பார்வை போய்விட்டது."

"மூளைக் கொதிப்புக்கும், அம்மை நோய்க்கும், க்ஷய நோய் தடுப்பு ஊசிக்கும் எந்தவகையிலும் தொடர்பு கிடையாது."

இந்த உண்மையை, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட டாக்டர் வாசுதேவ ராவ் குழு, ஆராய்ந்து அறிவித்துள்ளது.

அரசியல் அமங்கலியான ஆச்சாரியார், தனது, க்ஷய நோய் ஊசித் தடுப்பு அபத்த கிளர்ச்சிக்கு, 'பி. சி. ஜி. ஊசி போடப்பட்டதால்தான் வசந்தாவிற்குப் பார்வை போயிற்று,' எனச் சான்று காட்டி வாதிடத் தொடங்கினுர்.

அரசியல் கல்லறையிலிருந்து ஆச்சாரியாரின் ஆர்ப்பாட்ட பேச்சைக் கண்டு நடுநடுங்கிப்போன அரசாங்கம், வசந்தாவிற்குக் கண் போன காரணத்தைக் கண்டறிய, ஒரு மருத்துவ நிபுணர் குழுவை நியமித்தது.

மருத்துவத் துறை ஓய்வு பெற்ற ஆணையாளரான டாக்டர் கே. வாசுதேவராவ் அவர்களைக் குழுத் தலைவராகவும், சென்னை மருத்துவக் கல்லூரி பேராசிரியரான டாக்டர் சே. எஸ். சஞ்சீவி அவர்களையும், சென்னை கண் மருத்துவ நிலையத்தின் தற்காலிக ஆணையாளரான டாக்டர் இராமலிங்கம் அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட மூவர் குழுவை, ஜுன் 9-ல், சென்னை அரசாங்கம் நியமனம் செய்தது.

அக்குழுவின் கண்டுபிடிப்பு, இப்பொழுது அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது.

1954-ம் ஆண்டு குளிர் காலத்தில், பெருவாரி மூளைக் கொதிப்பால் பாதிக்கப்பட்டவர் பலர் இருக்கக் கூடுமென, அந்நிபுணர் குழு கருத்தறிவித்திருக்கிறது.

வசந்தா வசித்துவரும் பகுதியிலேயே ருக்மணி என்ற பெயரிய சிறுமியும் வசித்து வருகிருள். அவளுக்கும் பாதிப் பார்வை போய்விட்டிருக்கிறது. பி. சி. ஜி. ஊசி போடப்படுவதற்கு முன் செய்யப்படவேண்டிய ஆரம்பப் பரிசோனைக்கு, அச்சிறுமியை ஆளாக்கினதை அதற்குரிய காரணமாகக் கூறப்பட்டது. அச்சிறுமிக்கு பி. சி. ஜி. ஊசி போடப்படவில்லை.

அச்சிறுமியையும் மருத்துவ நிபுணர் குழு பரிசோதித்தது. பெருவாரி மூளைக்கொதிப்பின் காரணமாகவே அச்சிறுமிக்கும் கண்பார்வை குன்றியிருக்க வேண்டும் எனக் குழு கருதுகிறது.

பி. சி. ஜி. ஊசி குத்திக்கொண்ட வேறு இருவரும் சிற்சில சாதாரண குறைபாடுகளைக் கூறினர். அவர்களையும் பரிசோதித்துப் பார்த்த குழு, தடுப்பு ஊசி போட்டுக் கொண்டதற்குப் பிறகு ஏற்படக் கூடிய விளைவுகளே அவை என்றும், அதனுல் அவர்களுக்குத் தீமை எதுவும் ஏற்படாது என்றும், மருத்துவ நிபுணர் குழு அறிவித்துள்ளது.

பார்மோசாவைக் கோர சீனுவுக்கு உரிமை இல்லையாம்!

இலங்கைப் பிரதமர் கொத்தலாவல கூறுகிருர்

கொழும்பு, ஜுன் 21—

"யுத்தத்திற்கு முன்னர் பார்மோசா போர்ச்சுகீசியர் வசம் இருந்துவந்தது; பின்னர், அது ஜப்பானியர் கையில் சிக்கியது: இப்போது 'பார்மோசா தனக்குரியது' என்று சீனு எப்படி உரிமை கொண்டாட முடியும்?"

"பிரிட்டனுடன் செய்துகொண்ட இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் சரியே. 70 லட்சம் பேர்களில் 3 லட்சம் பேர்தான் திடமான மனிதர்கள்; அப்படியிருக்க, யுத்தத்தின்போது இந்த எண்ணிக்கை பாதுகாப்பிற்குப் போதாது."

—இவ்வாறு, இலங்கைப் பிரதமர் கொத்தலாவல, கவர்னர்-ஜெனரல் உரைமீது நடைபெற்ற விவாதத்தின்போது, தன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்

'இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலேயின் அயல் நாட்டுக் கொள்கை இலங்கைக்கே ஒரு 'அபகீர்த்தி'யை உண்டு பண்ணிவிட்டது."

"சர். ஜான் கொத்தலாவல, அண்மையில் நடைபெற்ற பாண்டுங் மாநாட்டில், சோவியத் காலனி ஆதிக்கம் ஏற்பட்டிருப்பதாகக் கூறி, ஆசிய மக்களின் ஒருமித்த வெறுப்புக்கு ஆளானுர்."

"இலங்கை, 'மேற்கத்திய நாடுகளின் வாலைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கும் நாடு' என்பது பாண்டுங் மாநாட்டின்போது நிரூபணமாகிவிட்டது"

"சோவியத் காலனி ஆதிக்கத்தைப் பற்றி மட்டுமே இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டாரே ஒழிய, அவர், இலங்கையில் ஏற்பட்டுள்ள காலனி ஆதிக்கம் பற்றிச் சிறிதளவு கூடச் சிந்திக்கத் தவறிவிட்டார்; அவர், பாண்டுங் மாநாட்டில் அமெரிக்காவின் 'கைப் பொம்மை'யாக நடந்து கொண்டார்."

இவ்வாறெல்லாம், விவாதத்தின் போது, உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சோவியத்-பிர்லா தொழில் உடன்பாடு!

தொழில் கருவி உற்பத்திச்சாலைக்கு ஏற்பாடு!

மாஸ்கோ, ஜுன் 21—

வடநாட்டுப் பெரும் முதலாளியான பிர்லா, ஒரு இயந்திரத் தொழில் கருவி உற்பத்திச்சாலையைத் துவங்க இருக்கிருர். அதற்குத் தேவைப்படும் இயந்திர சாதனங்களைக் கொடுத்து உதவ, சோவியத் நிறுவனம் ஒன்று பிர்லாவுடன் உடன்பாடு செய்துகொண்டு இருக்கிறது.

இயந்திர சாதனங்களைக் கொடுத்து உதவுவதுடன், அத்தொழிற்சாலை நிர்மாணம் சோவியத் எஞ்சினீயர்களின் கண்பார்வையில் நடைபெறவும் ஏற்பாடாகி இருக்கிறது.

தனது சுரண்டலுக்கு, சோவியத் நிறுவனத்தையும் இணங்கச் செய்த பிர்லாவின் திறமையே திறமை! ஆவடி தீர்மானமான சமதர்ம வடிவ ஏற்பாட்டில், இதுவும் ஒரு உறுப்பு போலும்!

மிளகாய் ஏற்றுமதியாளர் இழிசெயல்!

இந்தியப் பேரரசின் அனுமதியுடன் நடத்தும் இலாப வேட்டை!

தமிழ்நாடு ஏற்றுமதியாளர் தவிப்பு

"இந்த மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு மிளகாய் வற்றல் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதையும், மீண்டும் அதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காகச் சென்னை துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்படுவதையும் உடனடியாகத் தடை செய்ய சென்னை அரசாங்கம் முன்வர வேண்டும்."

—இக்கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை, மதுரை வெளிநாட்டு வர்த்தக சங்கத்தினர், சென்னை விவசாய மந்திரியிடம் கொடுத்துள்ளனர். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

"தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் மிளகாய் வற்றலுக்கு சிலோனில் அதிக மதிப்பு இருந்து வருகிறது; அதனுல், அதை அதிக விலை கொடுத்து வாங்க அவர்கள் முன்வருகின்றனர்;

"தமிழ் நாட்டு மிளகாய் வற்றல் சிலோன் நாட்டில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்ற உண்மையைத் தெரிந்துகொண்ட மற்ற மாநில வியாபாரிகள், தந்திரமாக தங்கள் இலாப வேட்டையைத் தொடங்கியுள்ளனர்;

"அதாவது, தமிழ் நாட்டு மிளகாய் வற்றலை வங்காளம், பீகார், ஐதராபாத், ஆந்திரம் முதலிய மாநிலத்தில் உள்ள ஏற்றுமதியாளர்கள் கொள்முதல் செய்து, முறையே தங்கள் தங்கள் மாநிலங்களுக்குக் கொண்டு செல்லுகின்றனர்; பின்னர், அதே தமிழ் நாட்டு மிளகாய் வற்றலை, தங்கள் தங்கள் மாநிலங்களில் பயிர் செய்யப்பட்டது எனக் கூறி, சென்னை துறைமுகத்திற்குக் கொண்டுவந்து, சிலோனுக்கு ஏற்றுமதி செய்துவிடுகின்றனர்;

"ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நாட்டுத் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் மிளகாய் வற்றலை மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், மேற்படி பொருளில் ஏற்றுமதி கொள்கை நிர்ணயிக்கப்படுகிறது; அக்கோட்பாட்டின்படி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஏற்றுமதி பங்கின் அளவு ஒதுக்கப்படுகிறது;

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

இரயில்வே நிர்வாகத்தின் ஓரவஞ்சனை!

அலட்சியப்படுத்துவதாகசென்னை வியாபாரிகள் குற்றச்சாட்டு

"சென்ற பிப்ரவரி திங்களில் பஞ்சாப், இராஜஸ்தான் ஆகிய இடங்களிலிருந்து வாங்கப்பட்ட நவதானியங்கள், பருப்பு வகைகள் இன்னும் சென்னைக்கு எடுத்துவரப்படாமல் அங்கேயே இருந்து வருகின்றன;

"அந்தப் பொருட்கள் அனைத்தும் வெயிலிலும், மழையிலும் கிடந்து அழுகி வீணுகின்றன;

"இவைகளுக்கெல்லாம் காரணம், இன்னும் தேவையான இரயில் 'வாகன்'கள் ஒதுக்கப்படாததேயாகும்;

"எனவே, சென்னை மார்க்கெட்டுகளில் பொருட்களின் விலைவாசிகள் ஏருமல் ஒரே நடுத்தர நிலையிலிருக்கச் செய்ய இராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய இடங்களிலுள்ள—ஏற்கனவே வாங்கப்பட்டு வீணுகிப் போகும் பொருட்களை உடனடியாகக் கொண்டு வர, மேலும் அதிக 'வாகன்'கள் ஒதுக்கி வசதி செய்து தரவேண்டும்."

—இவ்வாறு தென் இந்திய வர்த்தக சபை, இந்திய இரயில்வே குழுவை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளது.

"பம்பாய், கல்கத்தாவுக்கும் மட்டும் தேவையான அளவு 'வாகன்'கள் ஒதுக்கப்பட்டுள்ளது; ஆனுல் சென்னை மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது,"

என்றும் அச்சபை புகார் செய்திருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. 'இவ்வாறு இரயில்வே குழு செய்வதின் மூலம், இந்திய சர்க்கார் இதை விஷயத்தில் தலையிடவேண்டிய அவசியமே இருக்காது' என்றும் அக்குழு தெரிவித்துள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 22—6—'55 புதன்

சிந்தியாவின் துரோகம்!

இரங்கூனுக்கும்—சென்னைக்கும் கப்பல் விடும் உரிமையைப் பெற்றிருப்பது ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பொரேஷனுகும். அதன் சார்பில் கப்பல் விடும் பொறுப்பை இதுவரை சிந்தியா ஸ்டீம்ஷிப் கம்பெனி நிறைவேற்றிவந்திருக்கிறது.

ஏற்கனவே இரங்கூனுக்கும்-சென்னைக்கும் கப்பல் செலுத்தும் உரிமை பி. ஐ. எஸ். என். கம்பெனிக்கு இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, அந்த பிரிட்டிஷ் கம்பெனிக்கு இருந்துவந்த தனி உரிமை உடைத்தெரியப்பட்டது. கப்பல் விடும் உரிமை சிந்தியா கம்பெனிக்கும் கொடுக்கப்பட்டது.

மேற்படி கப்பற்பாதையில், பிரிட்டிஷ் கம்பெனிக்குப் போட்டியாகக் கப்பல் விடும் உரிமையை சிந்தியா கம்பெனி பெற்றதும், பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை ஒழுங்காகக் கப்பலை விட்டுக்கொண்டிருந்தது. 1951-ல் பிரிட்டிஷ் போட்டி அறவே ஒழிக்கப்பட்டு, பிரிட்டிஷ் கம்பெனிக்கு இருந்துவந்த தனிச் சலுகை சிந்தியாவின் கைக்கு மாற்றப்பட்டுவிட்டது.

நாள் செல்லச் செல்ல பதினைந்து தினங்களுக்கு ஒருமுறை கப்பல் விட்டுவந்தது போய், 20 தினங்களுக்கு ஒருமுறை கப்பல் விடுவது என்ற நிலை ஏற்பட்டது. இப்பொழுது அந்தக் கப்பல் போக்குவரத்தும் அறவே கைவிடப்பட்டுவிட்டது.

'எஸ். எஸ். ஜலகோபால்' என்ற பெயரிய ஒரு கப்பலை, சிந்தியா கம்பெனி சென்னைக்கும்-இரங்கூனுக்கும் செலுத்தி வந்தது. அந்தக் கப்பல் கடைசியாக ஜூன் 13-ந் தேதி சென்னை துறைமுகத்திற்கு வந்தது. ஜூலை 3-ல் வரவேண்டிய கப்பல், வராது எனத் தெரியவந்தது.

ஏற்கனவே அறிவித்திருந்தபடி, மேற்படி கப்பல் சென்னைக்கு வராமற்போவதற்கான காரணம் கூறுமாறு, அந்தக் கம்பெனியின் சென்னை ஏஜெண்டு கோரப்பட்டார். சென்னைக்கு வருவதற்கு பதிலாக அந்தக் கப்பல் பம்பாய் போக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

இரங்கூனுக்கும்—சென்னைக்கும் இடையில் கப்பல் விடுவதை, சிந்தியா கம்பெனி நிறுத்தியிருப்பது நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா எனத் தம்மால் கூற முடியாது என்றும், இக்கம்பெனியின்சென்னைஏஜெண்டு கையை விரித்துவிட்டார். பழுதுபட்ட 'ஜலகோபாலு'க்கு பதில் புதிய கப்பல் விடப்படுமா என்ற கேள்வியும், கேள்வி நிலையிலேயே இருந்து வருகிறது.

கடந்த நாற்பது ஆண்டுக் காலமாக ஓடிக்கொண்டிருக்கும் மேற்படி கப்பல், பழுது பார்க்க முடியாதத் தன்மையில் பழையதாகிவிட்டதாகவும், அதைப் பழுது பார்ப்பதும இலாபகரமானதாக இல்லாததால் பழுது பார்க்கப் போவதில்லை எனவும், அக்கம்பெனியின் பம்பாய் அலுவலகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது. ஓடிக்கொண்டிருந்தகப்பல் பழுதுபட்டுப் போனது ஒருபக்கம் இருக்க, இரங்கூனுக்குச் சென்னைக்கும் இதுவரை நடைபெற்றுவந்த வியாபாரமும் கணிசமாகக் குறைந்துவிட்டதாகவும், அதனால் ஏற்பட்டுள்ள வருமானக் குறைவு இலாபகரமாகக் கப்பல் விடுவதற்கு உதவாது என்பதாலும், மேற்படி கடற்பாதையில் சிந்தியா கம்பெனி கப்பல் செலுத்துவதை நிறுத்திக் கொள்ளத் தீர்மானித்துவிட்டது என்றும், பம்பாய் செய்தி அறிவிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் 10,000-க்குக் குறையாத தமிழர்கள், மேற்படி கப்பலில் சென்னையிலிருந்து இரங்கூனுக்குப் போய் வந்துக்கொண்டிருந்தனர். அவர்களுடைய பிரயாணம், உல்லாசப் பயணத்தைச் சேர்ந்தது அல்ல.

உள்நாட்டில் தொழில் கிடைக்காது, பர்மாவில் தொழில் தேடிச் சென்று, அங்கு ஏதோ கிடைத்த வேலையைச் செய்துகொண்டு, ஆண்டுதோறும் இங்கு தாய்நாட்டில் உள்ள சுற்றத்தாரைக் காண, வந்து போவதை ஒரு வாடிக்கையாகக் கொண்டிருந்தனர் பர்மா வாழ் தமிழர்கள். அவர்களுக்கு அருந்துணையாக இருந்தது, இரங்கூன் — சென்னை கடற் பாதை.

சிந்தியா கம்பெனியின் கப்பல் வசதியை நம்பி, பர்மாவிலிருந்து இங்கு வந்துள்ள தமிழர்கள், குறிப்பிட்ட கால கெடுவிற்குள் பர்மா திரும்பியாக வேண்டும். அப்படி திரும்பவில்லையானல், கால கெடுவு முடிவுற்று, தாய்நாடு சென்றுவிட்டு மீண்டும் பர்மா திரும்பிவர, அவர்களுக்கு பர்மா அரசாங்கம் தந்துள்ள அனுமதிச் சீட்டும் ரத்தாகிவிடும். அவைகளை மீண்டும் புதுப்பிப்பது என்பது அவ்வளவு இலகுவில் இல்லை. கோரும் அனைவரின் அனுமதிச் சீட்டும் மறுபடியும் புதுப்பிக்கப்படும் என்பதற்கு உறுதிப்பாடும் கிடையாது.

பர்மாவிலிருந்து, அந்த அரசாங்கத்தின் அனுமதிச் சீட்டுடன், தாய்நாடு வந்து, உற்றார் உறவினரைக் கண்டுவிட்டு, மீண்டும் பர்மா திரும்புவோம் என்று மன மகிழ்வுடன் வந்தவர்களின், எதிர்கால வாழ்வில் மண்ணைத் தெள்ளிப் போட்டுவிட்டது சிந்தியா கம்பெனி.

அனுமதிச் சீட்டில் குறிக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் பர்மா திரும்ப, சென்னை வந்துள்ள தமிழர்கள் விரும்புவார்களானல், அவர்கள் அனைவரும் புகைவண்டி மூலம் கல்கத்தா சென்று, அங்கிருந்து கப்பலில் பர்மா சென்றடைய வேண்டும்; அதற்கு அதிகப் பணம் செலவாகும். அப்பெருந்தொகையைச் செலவிட, பர்மாவிலிருந்து வந்துள்ள தமிழர்களால் முடியவே முடியாது.

இரங்கூன்—சென்னை கடற்பாதையில் இனி கப்பல் விடப்போவதில்லை என்ற சிந்தியா கம்பெனியின் முடிவு, இங்குள்ளார் அறியாதது போன்றே, கப்பல்விட அதற்கு உரிமை தந்துள்ள இந்தியப் பேரரசும் அறியாது எனக் கூறுவதற்கில்லை. தனது முடிவை, சிந்தியா கம்பெனி முன்கூட்டியே இந்தியப் பேரரசிற்கு அறிவித்தே இருக்கவேண்டும் என எண்ணுவதற்கு இடமுண்டு.

தனது பொறுப்பை உணர்ந்து இந்தியப் பேரரசும், பர்மாவிற்குச் செல்ல சென்னையில் காத்துக்கிடக்கும் தமிழர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை, இதுவரை நிறைவேற்ற முன்வரக்காணேம். 'தமிழர்கள்தானே பாதிக்கப்பட இருக்கிறவர்கள்—அவர்கள் எக்கேடு கெட்டால் என்ன?' என்று சிந்தியா கம்பெனி கருதி, கப்பல் விடுவதை முன் அறிவிப்பில்லாமல் நிறுத்திவிட்டதுபோலவே, இந்தியப் பேரரசும் தமிழர்கள் அவதிப்படுவதைக் குறித்துக் கவலை கொள்ளாமல் இருக்கிறது என்றே நாம் கொள்ளவேண்டியதாகிறது.

அதன் அலட்சிய புத்தியை எடுத்துக் கூறி, சென்னையில் தங்கிக் கிடக்கும் பர்மா செல்லும் தமிழர்கள், குறித்த காலத்தில் பர்மா சென்றடைவதற்கான ஏற்பாட்டை உடனடியாகச் செய்து தருமாறு, இந்தியப் பேரரசை வற்புறுத்த வேண்டும் சென்னை அரசாங்கம். இந்தச் சிறிய உதவியை யாவது, கடல் கடந்து சென்றுள்ள தமிழர்களுக்குச் செய்ய சென்னை அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டுகிறோம்.

395 இடங்களுக்கு!

1,380 மாணவர்கள் போட்டி

சென்னை மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலிருக்கும் சுமார் 395 இடங்களுக்கு இந்த ஆண்டு சுமார் 1,380 மாணவர்கள் மனுச் செய்திருக்கின்றனர் என்றும், இந்த எண்ணிக்கை சென்ற ஆண்டைவிட சற்று குறைவானது என்றும் கூறப்படுகிறது.

சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி—என, மூன்று மருத்துவக் கல்லூரிகள் மாநிலத்தில் உள்ளன.

கோலார் தங்கச் சுரங்கம் தேசிய மயமாகுமா?

"கோலார் தங்கச் சுரங்கங்களை தேசிய மயமாக்குவதை மைசூர் மாநில சர்க்கார் முழுவதுமாக ஆதரிக்கிறது," என்று மைசூர் அனுமந்தையா கூறியிருக்கிறார்.

அண்மையில், புதுடில்லியில் பிரதமர் நேரு பண்டிதருடன் தாம் இது பற்றிப் பேசியதாகவும், அதையொட்டி பண்டிதரிடமிருந்தும் தமக்கு இதுபற்றி கடிதம் வந்தது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனல், இதனை மறுத்து ஊர்காம் மெசர்ஸ் ஜான்டேலர் அண்ட் சன்ஸ் லிமிடெட் தங்கச் சுரங்கக் கம்பெனி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தங்க வயல்களை சர்க்கார் உடைமையாக்குவது சம்மந்தமாகக் கம்பெனிக்கு எவ்விதத் தகவலும் கிடையாது,' என்று குறிப்பிட்டுள்ளது.

தபால்—தந்தி ஊழியர்கள் குடியிருப்பு காலனி திட்டம்

முக்கியமான நகரங்களில் உள்ள தபால் - தந்தி இலாகா ஊழியர்களுக்காகக் குடியிருப்புக் காலனிகள் அமைக்கும் திட்டம், இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமென்று தெரிகிறது.

குடந்தையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

மாபெரும் வரவேற்பும்-பாராட்டும்

பொதுக்கூட்டத்தில் மாநில மாநாட்டிற்கு நிதியளிப்பு

18—6—55 காலை 6 மணிக்கு, பொதுச் செயலாளர் அவர்களுக்கு ஒரு மாபெரும் வரவேற்பு குடந்தை புகைவண்டி நிலையத்தில் நடைபெற்றது. பாண்டு வாத்தியங்கள் முழங்க, மாவட்ட செயலாளர் என்.எஸ். இளங்கோ, நகரச் செயலாளர் சு. பத்மநாபன், கே. கே. நீலமேகம், பராங்குசம் முதலியோர் மாலைகள் அணிவித்து, பொதுச் செயலாளரை வரவேற்றனர்; தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கோண்டனர்.

திருமணம்

காலை 8-45 மணியளவில், நாகேஸ்வரன் சன்னதி தெருவில் தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில், லூயி—தெரேசா; இராமதாஸ்—மணிமேகலை திருமணத்தில் பொதுச் செயலாளர் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர்.

பஞ்சாயத்து வரவேற்பு

குடந்தையிலிருந்து சுமார் 4 கல் தொலைவிலுள்ள கொரநாட்டு கருப்பூர் ஊராட்சி மன்றத்தினர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு பாராட்டுரை ஒன்று வழங்கினர்.

காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்தப் பாராட்டுக் கூட்டத்திற்கு தோழர் என் எஸ் இளங்கோ தலைமை தாங்கினர். பொதுச் செயலாளர் அவர்கள் பேசுகையில், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளோருக்கு—எந்த கருத்துடையவர்களானலும்—ஊராட்சி மன்றங்கள் வரவேற்கும் பெருந்தன்மையைப் பாராட்டுவதாகவும், இப்படிப்பட்ட அரசியல் பெருந்தன்மை, நாணயம், அரசியல் உலகில் மிகமிக அவசியம் என்று குறிப்பிட்டார்.

அரசியல் நாகரீகம் வளர, அரசியல் பண்பு வளர, அரசியல் எண்ணங்கள் ஊராட்சி மன்றங்களில் இடம்பெறத் தேவையில்லை என்றும், ஜனநாயகம் வளர அதுவே சிறந்த வழி என்றும் குறிப்பிட்டார்.

பின்னர், பெருங் கைதட்டலுக்கிடையே அண்ணு அவர்களின் உருவப் படத்தை ஊராட்சி மன்றத்திலே திறந்துவைத்து அரியதோர் கருத்துரை வழங்கினர்.

தி. மு. கழகத் துவக்கவிழா

பின்னர், சத்திரம்கருப்பூர் என்ற ஊரில் தி. மு. கழக துவக்க விழாவும், கட்டிடத் திறப்பு விழாவும் நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்க, தோழர்கள் என். எஸ் இளங்கோ, க. அறிவழகன் ஆகியோர் பேசிய பிறகு பொதுச்செயலாளர் அவர்கள் அரியதோர் கருத்துரை வழங்கினர். பின்னர், பல இடங்களில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களால் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டன.

குடந்தையில் கொடியேற்று விழா

பகல் 12 - மணியளவில் குடந்தையின் பல பகுதிகளில் கொடியேற்று விழா நடைபெற்றது.

சில இடங்களில் வாத்திய இசைகள் ஒலிக்கவும், மற்ற பல இடங்களில் தோழர்களின் ஆர்வ ஒலிகளுக்கிடையிலேயும் பொதுச் செயலாளர் கழகக் கொடிகளை ஏற்றி வைத்தார். மோதிலால் தெரு, டைமன் டாக்கீஸ் அருகில், பேட்டைத் தெரு, தாராசுரம், யாதவர் தெரு, துவரங்குறிச்சியில் பல இடங்கள் — இப்படி இவ்விழா கழகத் தோழர்களின் ஆர்வத்தால் பெரு விழாவாக நடைபெற்றது. தோழர்கள் கே. கே நீலமேகம், என். எஸ். இளங்கோ, க அறிவழகன், துரைராஜ், பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஊர்வலமும் பொதுக் கூட்டமும்

மாலை 5 மணியளவில் புகைவண்டி நிலையத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கே. கே. நீலமேகம், என். எஸ் இளங்கோ ஆகியோர் திறந்த காரில் ஊரின் பல முக்கிய வீதிகளில் அழைத்து வரப்பட்டனர். ஆங்காங்கே அதிர்வேட்டுகளும், வாணவேடிக்கைகளும் நடைபெற்றன ஏழு மணியளவில் குடந்தை அரண்மனைத் தோட்டத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரம் மக்கள் குழுமியிருந்தனர்.

தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமை தாங்கி கருத்துரை வழங்கினர்; தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ் இளங்கோ, தோழர் க. அறிவழகன் பாராட்டுரை வழங்கினர்; மாவட்டக் கழகத்தின் சார்பிலும், பல கிளைக் கழகங்களின் சார்பிலும் பாராட்டு, வாழ்த்துரைகள் வாசித்தளிக்கப்பட்டன; சுமார் 50-க்கும் மேற்பட்ட கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டன.

பின்னர், மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூ 1001 மாநில மாநாட்டு நிதிக்காக மாவட்டச் செயலாளரால் வழங்கப்பட்டது.

கடைசியாக பொதுச் செயலாளரின் நீண்டதோர் விளக்கவுரைக்குப் பின் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

உலக முழுமைக்கும் ஒரே சர்க்கார்

இன்னும் பரிபக்குவநிலை தோன்றவில்லையாம்!

ஐ.நா.பொதுச்செயலாளர் கருத்து

"இன்றைய சூழ்நிலைகளில் ஒரு உலக நிறுவனம் தேவைதான்; ஆனல் உலகம் முழுமைக்கும் ஒரே சர்க்கார் ஏற்படுவதற்குப் பரிபக்குவமான நிலைமை இன்னும் தோன்றவில்லை,"

என்று, ஐ. நா. சபைப் பொதுச் செயலாளர் டாக்டர் ஹாமர்ஸ்க் ஜோயெல்ட் இங்குள்ள பல்கலைக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

சென்னை நகரில் அமுலாகும்

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், சென்னை நகரில் செப்டம்பர்—அக்டோபர் திங்களில் அமுலாகும் என்று தெரிய வருகிறது.

மருத்துவத் துறை தலைமை அதிகாரி, திட்டத்தின்படி, தேவையான மருத்துவ வசதிகளைச் செய்து தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

திட்டம் அமுல் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சூடான் மந்திரிகள் பதவி நீக்கம்

சுயாட்சிச் சட்டப்படியும், பிரதமரின் யோசனைப்படியும் சூடான் கவர்னர், இரு மந்திரிகளை விலக்கி விட்டாராம்!

கொத்தலாவலேயின் போக்கு: எதிர்க் கட்சியினர் கண்டனம்!

இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையும், சர்வதேச மாநாடுகளில்—குறிப்பாக பாண்டுங் மாநாட்டில் கடைபிடித்த கொள்கையும், இலங்கையை 'சீட்டோ' நாடுகளுடன் சேர்த்துவிட்டதும் இந்த நாட்டின் பாதுகாப்பிற்கும், ஆதிபத்திய உரிமைக்கும் ஆபத்து விளைவித்துவிட்டது; ஆசிய மக்களுக்கு இலங்கையிடம் அவநம்பிக்கை ஏற்படுமாறு செய்துவிட்டது; உலக சமாதானத்திற்காக ஆசியா ஒன்றுபடுவதற்குக் குந்தகம் விளைவித்துவிட்டது,"

—என்று, இலங்கையிலுள்ள எல்லா எதிர்க் கட்சியினரும், சில சுயேச்சைகளும் சேர்ந்து கூட்டாக கவர்னர்-ஜெனரலின் உரைக்கு திருத்தமாகக் கொண்டுவரும் பிரரேபணை கூறுகிறது.

"இலங்கையில் வசிக்கும் இந்தியர் பிரச்சினையைத் தீர்ப்பதில் சர்க்கார் படுதோல்வி கண்டுள்ளது மட்டுமின்றி, சிரமங்களை அதிகரித்துள்ளது. இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கிடையே இருந்த நல்லுறவை கெடுத்துக்கொண்டுவிட்டது."

என்று, மற்றொரு திருத்தம் கூறுகிறது.

"நிதானமானதொரு மொழிக் கொள்கையைப் பின்பற்றி தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரவேண்டும்," என்று அவர்கள் கோருகிறார்கள். இப்போது அந்த இரண்டு மொழிகளும் அரசாங்க மொழிகளாகக் கருதப்படுகின்றன

இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கொள்கை மிக அதிருப்தி உண்டாக்கியுள்ளது என்றும், தனி

தமிழ் மாநிலம் அமைக்க வேண்டுமென்ற விருப்பத்தைக் கடுமையாகத் தூண்டுவதாயும் தோழர் சுந்தரலிங்கம் தமது திருத்தத்தில் கூறியிருக்கிறார்.

தனுஷ்கோடி துறைமுகம்

வேறு இடத்திற்கு மாற்றுவதுபற்றி உதவி மந்திரி அழகேசன்

மதுரை, ஜூன் 19—

தனுஷ்கோடியில் கடல் அரிப்பால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட்ட பின் உதவி இரயில்வே மந்திரி அழகேசன், 'அந்த நிலைபற்றிக் கவலைப்படத் தேவையில்லை,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனுஷ்கோடித் துறைமுகத்தை வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றி யோசனை தெரிவிப்பதற்கு நியமித்துள்ள குழு, இராமேஸ்வரத்திற்கு இருமருங்கிலுமுள்ள இரட்டைத்தாழி, ஆரியன் குண்டு ஆகிய இரு இடங்களில் ஏதேனும் ஒன்றிற்கு துறைமுகத்தை மாற்றலாமென கருத்தறிவித்திருப்பதாயும், அதுபற்றி இன்னும் ஆறு மாதகாலத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தகவல் தந்திருக்கிறார்.

நீண்ட தூர பிரயாணிகளுக்கு தூங்கும் வசதி

நீண்ட தூரம் பிரயாணம் செய்யும் மூன்றும் வகுப்பு இரயில் பிரயாணிகளுக்கு தூங்குவது 'பெர்த்' வசதி செய்து தரப்படும் என்றும், அந்த வசதி கொண்ட தனி 'போகி'கள் இரயிலில் இணைக்கப்படும் என்றும் அவர் உறுதி கூறியிருக்கிறாராம்.

மதுரை இரயில் நிலையம் திருத்தி அமைக்கும் வேலை சீக்கிரத்தில் துவங்கிவிடும் என்றும், சாமான் போக்கு - வரத்து நிலயத்தை வேறிடத்திற்கு மாற்றும் விஷயம் முடிவானதுமே அதன் கட்டிடம் கட்டுவது பற்றிய பிரச்சினை முடிவுறும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

கடன் தருவார்களாம்

இரயில்வே 'லெவல் கிராசிங்'குகள் மீது மேல்பாலம் கட்டுவதற்காக மாநில அரசாங்கங்களுக்கு திட்டக் குழு ரூ. 2 கோடி கடன் தர சம்மதித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

சேலம் - கன்னியாகுமரி இரயில் பாதை

சேலம் — கன்னியாகுமரிக்கும் பெங்களூர் — மங்களூருக்கும் இடையே இரயில் பாதைகள் போடுவதற்குத் திட்டங்கள் தயாராகயிருப்பதாகவும் கும்பகோணத்தில் அவர் கூறியுள்ளார்.

சென்னையிலிருந்து — விழுப்புரம்

மின்சார இரயில் பாதை அமையும்

இரண்டாம் திட்டத்தில் ஏற்பாடாம்

இரயில்வேக்களின் அபிவிருத்திக்கென இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,300 மைல் மின்சார இரயில் பாதையாக மாற்றப்படுமென மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.

சென்னை, பம்பாய், வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் முக்கியமாக மின்சார இரயில் பாதை போடப்படும் என்றும், சென்னையிலிருந்து செங்கற்பட்டு வழியாக விழுப்புரம்வரை மின்சார இரயில் போடத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

கொல்லம்—எர்ணாகுளம் பாதையையும் மின்சார இரயில் பாதையாக மாற்றுவது பற்றியும் யோசிக்கப்படுகிறது என்றும், நீராவி எஞ்சின்களாக மாற்றினால் இந்தியாவிடம் எண்ணெய் கிடையாதாகையால் சாவதானமாக இதைச் செய்ய வேண்டியிருக்கிறது என் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் மருத்துவ வசதி

விரிவாக்க யோசனை?

சென்னை மாநில சர்க்கார், மாநிலத்திலுள்ள மாவட்ட,தாலுகா தலைமை மருத்துவ நிலயங்களில் க்ஷய தடுப்பு-பல் நோய் சிகிச்சை-மேக நோய் தடுப்பு—ஆகிய பிரிவுகளைக் கூடுமான வரையிலும் இணைப்பது சம்மந்தமான உத்தேசத் திட்டம் ஒன்றை 'தீவிரமா'கப் பரிசீலித்து வருகின்றனராம்.

இத்திட்டம் இறுதியாகத் தயாரிக்கப்பட்டதும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட மருத்துவ வசதிகள் ஆகியவற்றிற்கான திட்ட நிகழ்ச்சிகளோடு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அனுப்பப்படுமென்று கூறப்படுகிறது.

இந்தப் 'பிரிவுகள்' ஸ்தல ஸ்தாபனத்திடமிருந்து சர்க்கார் எடுத்துக்கொள்ள இருக்கும் 26 மருத்துவ மனைகளிலும் இணைக்கப்படுமாம்.

இதையொட்டி, நர்சுகள், பெண் மருத்தவர்கள், கம்பவுண்டர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கவும், 200 ஆரம்ப சுகாதார நடுநிலயங்களை (சென்டர்) ஆரம்பிப்பது குறித்தும் சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும், மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, தேவையான இட வசதியும், சாதன வசதியும் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

இவை மட்டுமின்றி, ஆண்டொன்றில் குறைந்த பட்சம் 100 தாய்-சேய் நல விடுதிகள் வீதம் திறக்கவும், அவ்விடுதிகளின் நர்சுகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் தினம் ஒன்றிற்கு ஒரு வேளை 'சத்துள்ள' உணவு கொடுக்கவும், பள்ளிக் குழந்தைகளுக்குக் கட்டாய மருத்துவப் பரிசோதனை பற்றியும் சர்க்கார் ஆலோசித்து வருகிறதாம்.

தாயகம் திரும்பும் நேபாள

புரட்சித் தலைவர்

சில குறிப்புகள்

டாக்டர் கே ஐ சிங் என்ற நேபாளக் 'புரட்சித் தலைவர்' சீக்கிரமே நேபாள எல்லைக்கு வந்துவிடுவார் என்றும், ஒரு மாதத்திற்கு முன்பாகவே அவர் பீகிங்கை விட்டுப் புறப்பட்டுவிட்டதாகவும் தெரிய வருகிறது.

தாம் உடனடியாக தாயகம் செல்ல வழி செய்ய வேண்டும் என்றும், இன்றேல், தாம் தற்கொலை செய்துகொள்வதாக சீன அதிகாரிகளை அவர் அச்சுறுத்துவதாகவும். அதனால் இனியும் அவரைத் தொடர்ந்து சீனாவில் வைத்துக் காப்பாற்றுவது இயலாதெனவும் சீன அரசாங்கம் நேபாள அரசாங்கத்திற்கு தெரிவித்துவிட்டதாயும் கூறப்படுகிறது.

டாக்டர் சிங்கை தாயகம் திரும்ப அனுமதிப்பதா அல்லது எல்லையிலேயே அவரைக் கைது செய்துவிடுவதா என்பதை இன்னும் நேபாள அரசாங்கம் முடிவு செய்யவில்லையாம்.

1951-ல், இராணுவ ஆட்சியுடன் நேபாள காங்கிரஸ் ஒத்துப்போனதிலிருந்து அதை எதிர்த்து காங்கிரசில் தலைவராயிருந்த சிங் புரட்சி செய்யத் துவக்கினார்; அப்போதே அவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்; ஆனால், அடுத்த ஆண்டில் அவர் பைராவா சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார்; மீண்டும் அவரைக் கைது செய்வதில் நேபாள அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியில் வெற்றிபெற்றது; அவர் காட்மண்டு பகுதிக்குக் கொண்டுவரப்பட்டு மத்திய சர்க்கார் அலுவலகத்தில் காவல் வைக்கப்பட்டார்; இந்த முறையும் அவர் போலீஸ் 'பாதுகாப்பு'டன் சிறையிலிருந்து தப்பி திபெத்திற்கு ஓடிவிட்டார். அங்கு அவருக்கு சீன அதிகாரிகள் தஞ்சம் அளித்தனர். பின்னர் அவர் சீனத் தலைநகரான பீகிங் சென்றார்.

அவர் சமீப காலத்தில் தாயகம் திரும்ப விழைகிறார் என்ற தகவல் கிடைத்ததும் அவரது ஆதரவாளர்கள், 'மன்னர் அவரை மன்னித்து நேபாளத்தில் வாழ அனுமதிக்க வேண்டும்,' எனக் கோரமுற்பட்டனர். அவரைத் திரும்பவும் நாட்டிற்குள் கொண்டுவருவதற்காக சில அரசியல் கட்சிகள், மக்களிடம் கையெழுத்து வாங்கி மன்னருக்கு அனுப்பும் இயக்கம் நடத்திவந்தன.

'டாக்டர் சிங், தாம் நேபாள சட்டதிட்டப்படி கட்டுப்பட்டு நடப்பதாகவும், சர்வதேசத் தொடர்புகளை அறுத்துக்கொள்வதாகவும் பகிரங்கமாக அறிவிப்பாரானால் அவர் நேபாளத்தில் அமைதியாக வாழ அனுமதிக்கப்படலாம்,' என நேபாள காங்கிரஸ் கருதுவதாகத் தெரியவருகிறது.

அந்தப் புரட்சித் தலைவர் நாடு திரும்பியதும், அவரை என்ன செய்யவேண்டும் என்பது குறித்து இன்னும் அரசாங்கம் அதிகார பூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை.

டாக்டர் சிங் இப்போது நேபாள எல்லையிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள சொராங் எனும் கிராமத்திற்கு வந்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

சுமார் 30 தொண்டர்களுடன் நேபாளத்திற்குள் நுழைவதற்கான அரசாங்க அனுமதிக்காக அவர் காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் டாக்டர் சிங்கிடம் அனுதாபங்கொண்டவர்கள், மன்னர் மகேந்திராவைச் சந்தித்து டாக்டர் சிங் தாயகம் திரும்ப அனுமதி தருமாறு வற்புறுத்துவதற்காகச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

விருத்தாசலத்தில் அண்ணா

பொதுக்கூட்டத்தில் இலட்சிய விளக்கம்

18-6-55 இரவு $7\frac{1}{2}$-மணியளவில் விருத்தாசலம் ஆற்றுமணல் திடலில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் திரண்டிருந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், க. அன்பழகன் ஆகியோர் தி. மு கழகக் கொள்கைகளை விளக்கியும், வடவர் ஆதிக்கம்-சுரண்டல்-இந்தி மொழி ஒழிப்பின் அவசியம் குறித்தும் உரையாற்றினர்.

இறுதியில் அண்ணா அவர்கள் உரையாற்றுகையில், திராவிட நாடு திராவிடருக்கானால்தான் திராவிட இன மக்கள் வாழ்க்கை நிலை உயரும் என்பதைத் தெளிவுபடுத்தியும், திருச்சியில் நடைபெறவிருக்கும் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அனைவரும் திரண்டு வரும்படியும் கேட்டுக் கொண்டார்.

அண்ணா அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டதுடன், வாழ்த்து இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

இப் பொதுக்கூட்ட மேடையிலேயே தொண்டக்குறிச்சி தோழர் கருப்பையா—தோழியர் ஞானும்பாள் திருமணம் தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் ஒருவருக்கொருவர் மலர்மாலைகள் சூட்டிக்கொண்டனர்.

கட்டாய 'சிரமதானம்'

'அரசியல் சட்டத்திற்கு முரணானது'

சென்னை சர்க்காரின் எதிர்ப்பு

"கிராமப் பஞ்சாயத்துக்கள் கட்டாயமாக 'சிரமதானம்' செய்ய வேண்டுமென விதிப்பது, நிர்ப்பந்தமாக வேலை வாங்குவதைத் தடுக்கும் அரசியல் சட்ட 23-வது பிரிவிற்கு முரண்பட்டதாயிருக்கும்,"

என்று, சென்னை, ஆந்திரா, உத்தர பிரதேசம் ஆகிய மாநில சர்க்கார்கள் அச்சப்படுவதாகத் தெரிகிறது.

ஸ்தல சுய ஆட்சி இலாகா மந்திரிகளின் இரண்டாம் மாநாட்டின் பஞ்சாயத்துக் குழு ஒரு தீர்மானம் மூலமாக, கிராம மக்களிடம் கட்டாயமாக வேலை வாங்குவதென கருத்தறிவித்திருக்கிறது. இது பற்றி ஜூன் 23-ந் தேதியன்று சிம்லாவில் கூடும் ஸ்தல சுய ஆட்சி மத்திய கவுன்சில் மேலும் ஆராய்ந்து கருத்தறிவிக்கும் என்றும் தெரிகிறது.

மாநில பஞ்சாயத்து மசோதாவில் கட்டாய வேலை பற்றி ஒரு விதி இருந்ததாகவும், அந்த விதியை கூட்டுப் பொறுக்குக் குழு, 'அரசியல் சட்டம் 23-ம் பிரிவிற்கு முரணானது,' எனக் கூறி நீக்கிவிட்டதாகவும் உத்திர பிரதேச சர்க்கார் மத்திய சுகாதார இலாகாவிற்கு அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

சென்னை, ஆந்திர சர்க்கார்களும் இதே அடிப்படையில்தான் கட்டாய வேலைத் திட்டத்தை எதிர்க்கின்றனராம்.

அமுலாகுமுன்பே பயனற்று விட்டதாம்!

'அணுசக்தித் தாக்குதலை எதிர்த்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அமெரிக்கா வகுத்துள்ள திட்டம், அது அமுலுக்கு வருமுன்னதாகவே பயனற்றதாகிவிட்டது,"

என்று அணுசக்தி விஞ்ஞானி டாக்டர் ரால்ப் கூறியிருக்கிறார்.

அந்தத் திட்டத்தில் ரேடியக் கதிர் சாம்பலிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கான வசதியில்லாமற் போய்விட்டதென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

குரலில் சமாதானம்; ஆனால் செயலில்...?

"ஆயுதப் போட்டிகள் மூலம் எந்த நாடும் சமாதானத்தை அடைய முடியாதென்பதை மற்ற நாடுகளைப் போலவே நாங்களும் அறிகிறோம்; நீதி, நாணயம், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல், பிறரை மதிப்பது ஆகியவைதான் சமாதானத்தை அடைவதற்கான 'ஆயுதங்கள்,"

என்று ஐக்கிய நாடுகள் சபையின் 10-வது ஆண்டு விழாவில் பேசிய அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி

ரூ. 30 கோடி செலவில் திட்டம்

பம்பாய், ஜூன் 20—

அகில இந்திய கைத்திறமை நுட்ப வேலைக்குழு, கிராமங்களில் வீடுகளிலிருந்து கொண்டே கையால் செய்யப்படும் நுட்ப வேலைகளை ரூ. 30 கோடி செலவில் அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள 5 ஆண்டுத் திட்டத்தின் முழு விபரங்களை பரிசீலனை செய்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் மேலும் மூன்றரை லட்சம் பேருக்கு வேலை கிடைக்க வசதி ஏற்படும் என்று தெரியவருகிறது.

கையால் செய்யப்படும் இந்த நுட்பத்தொழில்களும், கைத்தறியும் சேர்ந்து நாட்டில் மொத்தம் 2 கோடி பேருக்கு வேலை தரும்; இந்த வேலை, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் பெறவில்லை.

இரண்டாம் ஐந்தாண்டு நகல் திட்டத்தில் குடிசைத் தொழில்களையும், மற்றும் சிறு தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 200 கோடி ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் ரூ 30 கோடி கிராமங்களில் வீடுகளில் கையால் செய்யப்படும் நுட்பத் தொழில்களுக்குக் கிடைக்கும் அடிப்படையில், அகில இந்திய 'போர்டு' திட்டக் குழுவிற்கு இந்தக் கைத்தொழில் அபிவிருத்தி செய்வதற்கு பொரிகளை தெரிவிக்கும் என்றும் கூறப்படுகிறது.

கனிப் பொருள்களைக் கண்டுபிடிக்க திட்டம்

எண்ணெய் ஊற்றுக்கள், செம்பு, ஈயம், துத்தநாகம், நிலக்கரி, கந்தகம் ஆகிய கனிப் பொருட்களைக் கண்டுபிடிக்க இந்திய சர்க்கார் இந்தியா முழுமையிலும் தீவிர திட்டமொன்றை அமுல் நடத்துவர் என்று கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்கள் ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை யொட்டியே மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

இத்திட்டத்திற்கு — அதாவது, எண்ணெய், மற்றும் கனிப்பொருட்களைக் கண்டுபிடிக்க ரூ. 20 கோடிக்கு மேல் செலவிடப்படும் என்று கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்க ஏதேனும் தனிக் கம்பெனிகள் முன் வந்தால் அவற்றின் திட்டம் சர்க்காரால் பரிசீலிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இனி எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிக்கும் வேலைகளை சர்க்காரே மேற்கொள்ளும் என்றும் சொல்லப்படுகிறது.

உறுப்பினர் அனைவரும் ஊழியரே!

கடமையைச் செய்வீர்! காரியமாற்றுவீர்!

வளரும் நம்மை வீழ்த்த முயற்சிப்பவரை கண்டு அஞ்சாதீர்

கழகத் தோழர்களுக்கு சம்பத் விளக்கம்

"நாம் வளர்ச்சியின் உச்சநிலைக்கு சென்றுகொண்டிருக்கிறோம்; அன்று நம்மைப் பற்றி நினைக்காதவர்களும்—நினைக்கக் கூட நேரமில்லாதவர்களும் இன்று நாம் அடைந்துள்ள வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுகிறார்கள்; பயமும் கொண்டுள்ளார்கள்.

"'காய்த்த மரத்தில்தான் கல்லெறி கிடைக்கும்' என்பதுபோல், வளர்ந்து வரும் நம்மை வீழ்த்தவும், மக்களிடையே நம்மைப்பற்றி ஏற்பட்டுள்ள நல்லெண்ணத்தைக் கெடுக்கவும் மாற்றுக் கட்சியினர்களும், அவர்கள் ஏடுகளும் முயற்சி செய்து வருகின்றன; நாம் அம்மாதிரியான நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் கண்டு அச்சமுறக்கூடாது; வருந்தத் தேவையுமில்லை; அரசியலிலே இதுபோன்ற சம்பவங்கள் சாதாரணமானதேயாகும்."

—இவ்வாறு, 19—6—55 அன்று காலை 11 மணியளவில். திருமங்கலத்தில், புகைப்பட நிலயத்தில் நடைபெற்ற தி. மு கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசுகையில் தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"'ஊழியர் கூட்டம்' என்றழைப்பதை நாம் 'உறுப்பினர் கூட்டம்' என்றே அழைக்க வேண்டும்; பொதுவாக தி. மு. கழகத்திலுள்ளவர்கள் அனைவரும் ஊழியர்களாக இருக்கும்போது 'ஊழியர் கூட்டம்' என்றழைப்பதில் அர்த்தமே இல்லை; எனவே, 'உறுப்பினர் கூட்டம்' என்றே அழைக்கவேண்டும்.

"மாதத்திற்கு இருமுறைகளாவது இம்மாதிரியான உறுப்பினர்கள் கூட்டங்களை ஏற்பாடு செய்து கழகத்தின் ஆக்க வேலைகள் குறித்தும், மக்களுக்கு என்னென்ன குறைகள் யார் யாரால் ஏற்படுகிறது—அவற்றை எவ்விதம் நிவர்த்தி செய்வது—என்பவை போன்றவைகளை அங்கு ஆராய வேண்டும்; 'இந்தந்தச் செய்திகள் ஆதாரமற்றவை'—என்பன போன்றவைகளையெல்லாம் பொதுமக்களுக்கு நல்ல முறையில் விளங்க வைக்கக் கூடிய ஆற்றலையும், பண்பையும், பழக்கத்தையும் அவற்றின் மூலம் ஏற்படுத்திக் கோள்ள வேண்டும். இவ்வாறு செய்ய முடியாவிட்டால் கழகச் செயற்குழுக்களைக் கூட்டியாவது பொதுமக்களுடன் நல்லதோர் தொடர்பு ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்."

வரவேற்பு விவரம்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வரவேற்பளிக்கும் முகத்தான் திருமங்கலம் நகர் முழுமையும் தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. தோழர் சம்பத் அவர்களின் வருகையை அறிவிக்கும் முறையில் இரயில் வந்து நின்றவுடன், நெடுஞ்செழியன் மன்றத் தோழர்களால் வெடி முழக்கங்கள் செய்யப்பட்டன.

காலை 10½ மணிக்கு முனிசிபல் கோர்ட் வீதியில் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. 11 மணிக்கு புகைப்பட நிலயத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் சுமார் 100 தோழர்கள் கலந்து கொண்டனர்.

கொடியேற்றல்

அன்று மாலை 5 மணிக்கு நெடுஞ்செழியன் மன்றத்திலும், பகுத்தறிவு இளைஞர் படிப்பகத்திலும் தோழர் ஈ வெ. கி. சம்பத் கொடியேற்றுவித்தார்

பொதுக்கூட்டம்

அன்று இரவு 7 மணிக்கு பந்தடித் திடலில் தோழர் மு பொன்னுலிங்கம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பெ பிச்சை, வேலன், இரசாக ஆகியோர் பேசிய பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும், ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவரும் இழிநிலை குறித்தும், தி. மு. கழகத்தை ஒழித்துவிடுவதற்காகப் பாடுபட்ட சென்னை மாநில முதலமைச்சர்கள் இன்று அடைந்துள்ள கேடான நிலை குறித்தும் நீண்டதோர் உரையாற்றினார்.

ரஷ்யப் பிரதமர் இந்தியா வருகை

இந்தியாவுக்கு வருகை தரும்படியாக ரஷ்யப் பிரதமர் புல்கானினுக்குத் தாம் விடுத்துள்ள அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளதாகப் பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

அவர் இந்தியாவிற்கு வருகை தரும் நாள் நிச்சயமாகக் குறிப்பிடப்படவில்லையென்றும், ஆயினும் பொதுவாகவே இந்தியாவிற்கு வருகை தரும் அயல் நாட்டவர்கள் பெரும்பாலும் மழை காலத்திலேயேதான் வருவார்களென்றும், ஏனெனில் அக்கால நிலைதான் அவர்களுக்கு ஏற்றதாக இருக்குமென்றும் நேரு கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிந்து மாநில முன்னாள் முதலமைச்சர் கைது

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு அபேட்சகரும், முன்னாள் சிந்து மாநில முதலமைச்சருமான காஜி பஸ்லுல்லா, சிந்து ஐதராபாத்தில் சட்ட சபைக் கட்டிடத்திற்கு அருகில் தமது காரில் வந்துகொண்டிருக்கையில் போலீசாரால் கைது செய்யப்பட்டார் என்று பத்திரிகைச் செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் நடைபெறும் முன்னமேயே அவர் கைது செய்யப்பட்டுவிட்டார் என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர் கைது செய்யப்பட்டது பற்றித் தங்களுக்கு எவ்விதத் தகவலும் கிடையாதென்று மாநில முதலமைச்சர் குர்ரோவும், நிலவரி அமைச்சர் பீர் அலி முகமதுவும் கூறியிருக்கிறார்கள்.

ஒருவேளை சட்ட சபைக் கட்டிடத்தை வெடிகுண்டு வைத்துத் தாக்கித் தகர்த்தெறிய செய்யப்பட்ட 'சதி' சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கலாமா என்பது பற்றிய தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டங்கள்

★

வேலூர்

கோட்டை மைதானத்தில்
26—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: முல்லை-சத்தி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

* * *

அன்று காலை, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகரசபையில் வரவேற்பளிக்கப்படும்.

★

நரசிங்கபுரம்

23—6—55 மாலை, தோழர் வி. ஏ. பசுல் தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி வி. ஏ இளஞ்செழியன், வி. வேணுகோபால் ஆகியோர் பேசுவர்.

சிதம்பரம் வட்ட தி. மு. கழகக் கிளைத் தோழர்கட்கு

"பொதுக்குழு தீர்மானப்படி நமது தென்னார்க்காடு மாவட்டத்தின், மாநில மாநாட்டு பங்குத் தொகை ரூ. 2,000-த்திற்கும், சிதம்பரம் வட்டத்தின் பங்குத் தொகை ரூ. 300-ம் கொடுத்தாக வேண்டிய பொறுப்பை மாவட்டக் குழு என்னிடம் ஒப்படைத்துள்ளது. ஆகலால், கிளைக் கழகச் செயலாளர்கள் 26—6—55-க்குள் 'பொன். சொக்கலிங்கம், சிதம்பரம் வட்ட தி. மு. கழக அலுவலகம், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெரு, சிதம்பரம்,' என்ற முகவரிக்கு தலா ரூபாய் பத்து வீதம் அனுப்பி ரசீது பெற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மாநில மாநாட்டிற்கு உடனடியாக நிதி சேர்த்து அண்ணா அவர்களிடம் கொடுத்தாக வேண்டும்,"

என்று, சிதம்பரம் வட்ட தி. மு. கழகச்செயலாளர் தோழர் பொன். சொக்கலிங்கம் அறிவிக்கிறார்.

சேலம் நகர தி. மு. கழக தோழர்கட்கு

★

"நகரத்தில் உள்ள வட்டாரக் கிளைகள், உடனடியாகச் செயற்குழு உறுப்பினர்கள், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியவர்களைத் தேர்ந்தெடுத்து நகரக் கிளைக்குத் தெரிவிக்க கோருகிறேன். இதுவரையிலும் கிளைக் கழகங்கள் இல்லாத வட்டங்களில் அந்தந்த வட்டத்தில் உள்ள கழகத் தோழர்கள் உடனடியாக கிளைக் கழகத்தைத் தோற்றுவிக்கவேண்டுமாறு கோருகிறேன். விபரம் தெரிந்து கொள்ள விரும்பும் தோழர்கள் நேரில் என்னிடம் வந்து தெரிந்துகொள்ளவும்,"

என்று, சேலம் நகர தி மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

மிளகாய் ஏற்றுமதியாளர் இழிசெயல்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"மிளகாய் வற்றலைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாநிலமும் சுயதேவையில் நிறைவு பெற்றிருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால், சென்னை மாநிலத்திலிருந்து பிறமாநிலங்களுக்கு அதைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியத்திற்கே இடமில்லை; இந்நிலையில் அதிகமான மிளகாய் வற்றலை பிற மாநில ஏற்றுமதி வர்த்தகர்கள் சென்னை மாநிலத்தில் கொள்முதல் செய்து வருவதால், இங்குள்ளவர்கள் அதிக விலை கொடுத்து அதை வாங்கி உபயோகிக்க வேண்டியதாகிறது;

"மிளகாய் வற்றலில் சுயதேவையில் நிறைவு காணாத மாநிலங்களான பஞ்சாப், சவுராஷ்டிரம், ஐதராபாத் போன்றவைகளுக்கு, ஏற்றுமதி பங்கீட்டை இந்தியப் பேரரசு அதிகமாக்கி இருக்கிறது;

"தனது தேவைக்குக் கூடுதலாக மிளகாய் வற்றலை சென்னை விளைவித்த போதிலும் அதற்குரிய ஏற்றுமதி பங்கை அனுமதிக்க இந்தியப் பேரரசு தயங்குகிறது—மறுக்கிறது.

"தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் மிளகாயைக் கொள்முதல் செய்து, தங்கள் மாநிலங்களுக்குக் கடத்திச் சென்று, பிறகு சென்னை துறைமுகத்தின்மூலம் அதைப் பிற நாடுகளுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்துவருகின்றதில், இங்குள்ள மிளகாய் வற்றல் உற்பத்தியாளர்களுக்கோ அல்லது ஏற்றுமதியாளர்களுக்கோ செல்லாக்காசளவும் பலன் கிடையாது.

"எனவே, சென்னை அரசாங்கம் தலையிட்டு, சென்னை மாநிலத்திற்கு மிளகாய் வற்றல் ஏற்றுமதியில் ஒதுக்கப்பட்டுள்ள பங்கீட்டைக் கூட்டுமாறு, இந்தியப் பேரரசை வற்புறுத்த வேண்டும்."

மதுரை மாவட்ட தி. மு. கழகக் கிளைத் தோழர்கட்கு

"மாநில மாநாட்டு நிதி இம்மாதம் 20-ந் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்று அறிக்கைகள் விட்டும், இருமுறை கடிதங்கள் எழுதியும் இதுவரை கொடுக்காதிருக்கிற கிளைக் கழகங்கள் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என்று, மதுரை மாட்ட. தி மு கழகச் செயலாளர் தோழர் எஸ் முத்து அறிவிக்கிறார்.

இராமகிருஷ்ண குருகுல அனாதை மாணவர் விடுதி

புதிய கட்டிடத் திறப்பு விழா

"24—6—55-ல், திருப்பராய்த்துறை, இராமகிருஷ்ண குருகுல அனாதை மாணவர் விடுதியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவும், 'இராமகிருஷ்ண வித்யாலயம்' என்ற ஆதார ஆரம்பக் கல்விப் பள்ளியின் துவக்க விழாவும் நடைபெறும். சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள் புதிய கட்டிடத்தைத் திறந்துவைக்க இசைந்துள்ளார். விவசாயம் பால் பண்ணை, தச்சு, தையல், பாய் நெசவு வேஷ்டி, துண்டு ஜமக்காள நெசவுகள் முதலியவைகள் அடங்கிய கைத்தொழில் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்படும்," என்று அறிவிக்கப்படுகிறது.

குடியானவர்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை அரசாங்கம் முன்வரக் கூடும் என நம்பப்படுகிறது.

வரப்போகிற சட்டசபைக் கூட்டம் ஆகஸ்டு முதல் தேதியில் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது கவர்னர் உரையுடன் துவங்கும் சட்டசபைக் கூட்டம் பதினைந்து தினங்கள்வரை நடைபெறும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் மேற்படி கூட்டத்தில் விவாதிக்கப்படும் என நம்பப்படுகிறது. சில சாதாரண மசோதாக்களும் இந்தக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருக்கின்றன.

மேலும் 300 அகாலிகள் கைது

நேற்று இரவு முடிவுற்ற கடந்த 26 மணி நேர 'அகண்டமோர்ச்சா' எனப்படும் 'அகண்ட சத்தியாக்கிரகத்'தின் விளைவாக பஞ்சாபின் பல்வேறு பகுதிகளிலும் 300-க்கு மேற்பட்ட அகாலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சென்னை - இரங்கூன் கப்பல் போக்குவரத்து

சிந்தியா கம்பெனி முடிவு பற்றி அதிகாரி

பம்பாய், ஜூன் 20—

'ஈஸ்டர்ன் ஷிப்பிங் கார்ப்பரேஷன்' சார்பில், சிந்தியா கம்பெனியார் நடத்திவரும் இரங்கூன்—சென்னை கப்பல் போக்குவரத்தை நிறுத்திவிட முடிவு செய்திருப்பதாக சிந்தியா கம்பெனி அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த வழியில் போய் வந்துகொண்டிருக்கும் 'எஸ். எஸ் ஜலகோபால்' என்ற கப்பல் கடந்த 40 ஆண்டுகளாக போக்குவரத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், அதனால் அது மிகவும் பழுதுபட்டுவிட்டதாயும், பழுது பார்ப்பதற்கு மிக அதிகமான செலவாகுமாகையால் பழுது பார்ப்பது இலாபகரமானதாயிராது என்றும், மேலும், இரங்கூன்—சென்னை வர்த்தகம் கடந்த சில ஆண்டுகளாக வெகுவாகக் குறைந்துவிட்டது என்றும், அதனாலும்தான் அந்தக் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்படுவதாயும் அந்த அதிகாரி கூறியிருக்கிறார்.

சர்க்கார் ஊழியரைத் தாக்கிய நடிகை!

ரூ. 500 அபராதம்

நாகபுரி, ஜூன் 21—

பிரபல வடநாட்டு திரைப்பட நடிகை சாந்தா ஆப்தேவுக்கும், அவரது சகோதரர் பாபுராவுக்கும் நாகபுரி முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் தலா ரூ. 500 அபராதம் விதித்து வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

சர்க்கார் ஊழியர் ஒருவரைத் தமது கடமையைச் செய்வதினின்றும் தடுத்ததாக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

மது வகை வைத்திருந்ததாக சாந்தா ஆப்தே மீதும், மது அருந்தியதாக அவரது சகோதரர் மீதும் தொடரப்பட்ட வழக்குகளில் அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.